**வட மாகாணத்தில் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதற்கான செயற்திட்டத்தின் (கண்டி – யாழ்ப்பாணம் வீதியின் 63 கிலோ மீற்றர்களின் புனரமைப்பு) - 2014**

---

வட மாகாணத்தில் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதற்கான செயற்திட்டத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கும் இடையேயான 2010 செப்தெம்பர் 09 ஆந் திகதிய பீஎல்ஏ 201002 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இச்செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு, காலம் என்பன

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவர்களாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவுமுள்ளது. கண்டி - யாழ்ப்பாண வீதியின் (ஏ09) 122 கிலோமீற்றர் தூரத்திலிருந்து 230 கிலோமீற்றர் வரை 63 கிலோமீற்றரை புனரமைத்து அபிவிருத்தி செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட கிரயம் 83.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். இதில் 71 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியது. செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் 2010 ஜூன் 01 ஆந் திகதி ஆரம்பமாகியது. வீதியின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகள் 2011 பெப்ரவரி 07 ஆந் திகதி ஆரம்பமாகியது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 ஒக்தோபர் 06 ஆந் திகதியளவில் முடிவடைய பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 டிசெம்பர் 31 வரை தொடர்ந்திருந்தன.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு

நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடனுக்கான உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிசார் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் ஏற்பட்ட சீராக்கல்களது விளைவுகளைத்தவிர,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

**2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட விசேட கடனாகிய ரூபா 2.49 மில்லியன் நிதிசார் கூற்றுக்களில் வெவ்வேறாக இனங்காணப்பட்டு நிதிசார் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. கடனுக்கான பொறுப்பு 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

வழக்கப்படி, ஒப்பந்தகாராரலும் உசாத்துணையாளராலும் கடன் பெறுகைகள் மூலம் பெறப்பட்ட வாகனங்கள், உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற சொத்துக்களது பெறுமதி வெவ்வேறாக இனங்காணப்பட்டுச் செயற்திட்டக் கணக்கில்

கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய, சிவில் வேலைகளின் பெறுமதியால் உள்ளடக்கப்பட்ட ரூபா 35.92 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டின்போது உரிய அமைச்சிற்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரராலும் உசாத்துணையாளராலும் கொள்வனவு செய்யப்பட்ட அவ்வாறான சொத்துக்களும் சிவில் வேலைப் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட ஏனைய சொத்துக்களும் பின்னர் உரிய அமைச்சிற்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தபோதும் நிலையான சொத்துப் பதிவேடுகளும் நேரடிச்சரி, பிழை பார்த்தலுக்குரிய ஏனைய விபரங்களும் கிடைக்கப்பெறாமையால் அவற்றைக் கணக்காய்வில் சரி, பிழை பார்க்க முடியாதிருந்தது.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 8.39 ஆம் பிரிவுக்கு முரணாக மேந்தலைக் கிரயமாகிய ரூபா 1.367 மில்லியன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறவிடப்பட்டிருந்தது. மேலும், குறித்த சுற்றறிக்கையின் 8.6 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தில் பணியாற்றிய வீதி அபிவிருத்தி அதிகாரசபைப் பதவியணியினருக்கு ரூபா 233,254 மிகையூதியமாகவும் மருத்துவப் படியாகவும் வழங்கப்பட்டிருந்தது. எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் மேற்படி இணங்காத சந்தர்ப்பங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபோதும், திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது அந்த நடைமுறைகள் மீளாய்வாண்டின்போதும் அந்நிகழ்வுகள் தொடரப்பட்டிருந்தன.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத்திட்ட நிதியேற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் மற்றும் 2014 டிசெம்பர் 31 வரையிலுமான நிதிப் பயன்பாடு என்பவற்றினது சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை | | பயன்படுத்தப்பட்ட நிதி 2014 அம் ஆண்டின் போது | | பயன்படுத்தப்பட்ட நிதி 2014 டிசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏற்றுமதி இறக்குமதி வங்கி - சீனா | 71.00 | 8,153.20 | 5.70 | 746.05 | 70.98 | 8,568.61 |
| இலங்கை அரசாங்கம் | 12.50 | 1,832.81 | 0.27 | 35.30 | 11.04 | 1,794.95 |
| | 83.50 | 9,986.01 | 5.97 | 781.35 | 82.02 | 10,363.56 |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வீதிப் புனரமைப்பு வேலைகள் எதிர்பார்த்த திகதிக்கு முன்னரே பகுதியளவில் நிறைவடைந்து புனரமைக்கப்பட்ட வீதி, 2013 ஆகஸ்ட் 06 ஆந் திகதியன்று வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறைபாட்டு பொறுப்பு காலம் 2014 ஆகஸ்ட் 06 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. 2015 ஆகஸ்டில் கணக்காய்வாளர்கள் மேற்கொண்ட பரிசோதனையின்போது 131+100 கிலோமீற்றர் செயினேஜ் முதல் 131+106 கிலோமீற்றர் செயினேஜ் வரையிலான வீதியின் தளத்தில் வெடிப்புகள் அவதானிக்கப்பட்டன. மேலும் 123/1 ஆம் இலக்க மதகின் மேற்பக்கத்திலும் இருமருங்கிலும் 132/1 ஆம் இலக்க மதகின் கொங்கிரீட் தளத்திலும் வெடிப்புகள் காணப்பட்டன. இவற்றிற்குப் புறம்பாக 230/3 ஆம் இலக்கப் பாலத்தின் தள நுழைவாயிலினது உட்புகு பகுதியிலும் வீதியின் அஸ்பலற் கொங்கிரீட்டிலும் வெடிப்புகள் காணப்பட்டன. பழுது ஏற்படுமிடத்து அவற்றிற்குப் பொறுப்பாகும் காலப்பகுதியின்போது அக்குறைபாடுகளை அவதானித்து அவற்றை நிவர்த்தி செய்வதற்குச் செயற்திட்டம் நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வலது பக்கத்தே 131+060 கிலோமீட்டர் செயினேஜ் வளைவு முறையாக வடிவமைக்கப்பட்டு மீள நிர்மாணிக்கப்படவில்லை எனக் களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. வீதியின் ஒரு பகுதியினது அகலம் 0.5 மீற்றரால் குறைக்கப்பட்டமையால் இந்த செயினேஜில் உள்ள வீதியின் தளம் பழுதடைந்திருந்தது. மேலும், கிட்டிய இடங்களில் அடையாளப் பலகைகள் இல்லாதிருந்தமை, வீதி குறுகியதாக இருந்ததால் வீதியின் நுனிப்பகுதிக் கோடும் மத்திய கோடும் அழிந்திருந்தமை போன்றவற்றால் பாதுகாப்புத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தொழில்நுட்பக் குறிப்பின் 03 ஆம் பகுதியின் 114 ஆம் இலக்க கூறின் பிரகாரம், ஒப்பந்தகாரர் போக்குவரத்துப் பாதையைப் பராமரிக்க வேண்டும். இதற்கென ரூபா 21.12 மில்லியன் பிரமாணக் குறிப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் சமர்ப்பித்த வேலை பூர்த்தியடைந்தமையைக் குறிக்கும் கூற்றில் ஒப்பந்தகாரர் இதன் பொருட்டு ரூபா 73.95 மில்லியன் செலவழித்ததாகக் குறிப்பிடப்பட்டு அதற்கேற்ப கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுமிருந்தது.